පරිසර යාවත්කාලීනව පවත්වාගෙන යාම සඳහා සහ මිනිස් පරිබෝජනයට අවශ්‍ය පළතුරු පැළ වර්ගයන් වැඩි වශයෙන් මිහිතලයට එක් කිරිම වෙනුවෙන් පළතුරු පැළ රෝපනය කිරීම සිදු කරන ලදී.
එසේම වැඩසටහන් සඳහා තරුණ තරුණියන් සහභාගි කරගැනිමේදී මුහුණ දෙන මූලිකම ගැටළුව වන්නේ සති අන්තයේ පවා පවත්වන පෞද්ගලික පන්තිවේ.බොහෝ අවස්ථාවල වැඩසටහන්වලට සහභාගීවීමට තරුණ තරුණියන් කැමැත්ත එලකල ද ඉහත සඳහන් කරුන බාධකයක් වී ඇත.කෙසේවුව ද සමාජයට යහපත් තරුණ පරපුරක් ධීවර සහයෝගිතා ව්‍යාපාරය තුලින් බිහි කිරීම අපගේ ඒකයන අරමුණ බවත් ඒ අරමුණු කරා පියනගමින් ආදර්ශමත් සමාජයක් බිහිකිරීම කලුතර දිස්ත්‍රික්කයේ තරුණ සමාජයේ අධිශ්ඨානයයි.

ඇන්ටනි රොඩ්රිගෝ
කලුතර දිස්ත්‍රික්කය



# “අද තරුණයින් හෙට දවසේ නායකයින්ය”

රටක සංවර්ධනය සඳහා තරුණයින්ගේ දායකත්වය අති විශාල දායකත්වයක් සපයයි. ඒ සම්බන්ධයෙන්, ජාතික ධීවර සහයෝගිතා ව්‍යාපාරයේ කොටසක් වන **“පරිසරය සහ යහපත් සෞඛ්‍ය සමාජ වෙනසක් සඳහා වූ තරුණ ව්‍යාපාරය”** ශ්‍රී ලංකාවේ දිස්ත්‍රික්ක 17 ක ක්‍රියාත්මක වේ. ඒ සම්බන්ධයෙන්, උතුරු පළාතේ මුලතිව් දිස්ත්‍රික්කය 2018 සිට විවිධ ආකාරවලින් සේවය කරමින් සිටී. එහිදී ක්‍රියාත්මකවන ක්‍රියාකාරකම් වන්නේ,

01. මුලතිව් දිස්ත්‍රික්කයේ නීති විරෝධී ධීවර කටයුතු පාලනය කිරීම

02. සංහිඳියාව පදනම් කරගත් ක්‍රියාකාරකම්

03. පාරිසරික ආරක්ෂණ කටයුතු

04. බලපෑම් කටයුතු සිදු කිරීම



# “இன்றைய இளைஞர்களே நாளைய தலைவர்களாவர்”

ஒரு நாட்டினுடைய வளர்ச்சிக்கு இளைஞர்களின் பங்களிப்பானது மிகப்பெரிய பங்காகும் அந்த வகையில் தேசிய மீன ஒத்துழைப்பு இயக்கத்தின் அங்கமான **“சுற்றாடல் மற்றும் நல்ல ஆரோக்கிய சமூக மாற்றத்திற்கான இளைஞர் இயக்கம்”** இலங்கையில் 17 மாவட்டங்கள் செயற்பட்டு வருகின்றது அந்த வகையில் வட மாகாணத்தில் முல்லைத்தீவு மாவட்டமானது 2018 ஆம் ஆண்டிலிருந்து இன்றுவரை பல்வேறு வகையில் சேவையாற்றி வருகின்றது அவ்வாறான செயற்பாடாக:

01. முல்லை மாவட்டத்தில் சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கைகளை கட்டுப்படுத்துதல்

02. நல்லிணக்கம் சார்ந்த செயற்பாடுகள்

03. சுற்றுச்சூழல் பாதுகாப்பு நடவடிக்கைகள்

04. அழுத்த செயற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றன



# “ரண் மாவத்த”

குருநாகல் மாவட்டத்தின் பொல்பிதிகம பிரதேச செயலகத்தின் மா எலிய கிராம சேவைப் பிரிவிற்கு உரித்தான பன்ட் சந்தியிலிருந்து கட்டுகம்பலபுர வரையிலான வீதி மிகவும் பழுதடைந்த நிலையில் இருப்பதோடு மேலும், இது தொடர்பாக எந்தவொரு அரசு அல்லது அரசு சார்பற்ற நிறுவனமும் கவனம் செலுத்தவில்லை. இதனால் போக்குவரத்துக்கு சிரமமாக இருப்பதோடு இந்த பாதையூடாக பயணிக்கும் மக்கள் பெரும் சிரமங்களையும் சந்திக்க நேரிட்டது. காலம் கடந்துவிட்ட போதிலும், இப் பிரதேசவாசிகளிடமிருந்து பல கோரிக்கைகள் இருந்தபோதிலும், அதற்கான பொறுப்பான எந்தவொரு அதிகாரியும் இது தொடர்பாக கவனம் செலுத்தவில்லை. இச் சந்தர்ப்பத்தில், குருநாகல் மாவட்டத்தில் இயங்கும் NAFSO அமைப்புடன் ஒருங்கிணைந்து செயற்படுகின்ற சமூக ஒத்துழைப்பு இயக்கத்தின் கவனம் இதில் ஈர்க்கப்பட்டது. அதனூடாக இயங்கும் பொல்பிதிகம பிராந்திய இளைஞர் மன்றத்தின் தலையீட்டால், இந்த பாதையை புனர்நிர்மாணம் செய்வதற்கான முயற்சி எடுக்கப்பட்டது. முதலில், சம்பந்தப்பட்ட தரப்பினருக்குத் இது பற்றி தெரிவிக்க நாங்கள் நடவடிக்கைகளை மேற்கொண்டோம். அதன்படி, கிராமத்தில் வசிக்கும் மதகுருமார்கள், அப்பிரதேசத்தில் பணிபுரியும் அரசு அதிகாரிகள், சங்கங்களின் அதிகாரிகள் மற்றும் கிராம மக்களைக் ஒன்றிணைத்து , இந்த பிரச்சினை தொடர்பான அவர்களின் கருத்துக்களையும் உள்வாங்கி கொண்டு அவர்களுக்கு இது பற்றி தெரிவித்தோம்.

அவர்களின் ஒப்பந்தத்தின் அடிப்படையில், ஆலோசனைகள் மற்றும் அறிவுறுத்தல்களையும் வழங்கி பின்பு பாதையை சீரமைக்க நியமிக்கப்பட்ட அரசு நிறுவனங்களைத் தேர்ந்தெடுத்ததோடு, அதனடிப்படையில், பொல்பிதிகம பிரதேச செயலகம், பொல்பிதிகம பிரதேச சபை மற்றும் அந்தப் பாதையை அண்டி கால்வாய் ஒன்று செல்வதால், எகோடகம வணிக அதிகாரசபை அலுவலகம் போன்ற அரசு நிறுவனங்களுக்கும் இது தொடர்பாக தெரிவிக்கப்பட்டது. அவர்களுக்குத் தெரிவித்தன் பிற்பாடு, இளைஞர்களாகிய எங்களுக்கு இந்தப் பணியை மேற்கொள்வது இலகுவானதொன்றல்ல என்பதை உணர்ந்தோம். அதனைத் தொடர்ந்து, எங்கள் இளைஞர் மன்றம் ஒன்று கூடி, சமூக ஒத்துழைப்பு இயக்கத்தின் ஒருங்கிணைப்பாளரான திரு. அஜித் ரூபசிங்க மற்றும் இணை நிதிச் செயலாளர் திரு. சஞ்சீவ சம்பத் ஆகியோருடன் இது தொடர்பாக கலந்துரையாடி, நாங்கள் அனைவரும் இந்தப் பணியை எப்படியாவது நிறைவேற்ற வேண்டும் என தீர்மானித்தோம். இப் பிரச்சினை தொடர்பாக நாங்கள் அரசு நிறுவனங்களின் பொறுப்பான அதிகாரிகளுடன் பல சுற்றுக்கள் பேச்சுவார்த்தைகளை நடத்தினோம். அத்துடன் நிறுத்திவிடாமல் நாங்கள் ஒரு அழுத்தச் செயற்பாட்டு இதன் விளைவாக, பொல்பிதிகம பிரதேச சபையின் செயலாளர் இந்த பாதையை புனர்நிர்மாணம் செய்து தருவதாக எங்களுக்கு உறுதியளித்தார். அதன்படி, தொழில்நுட்ப அதிகாரிகள் மற்றும் சுற்றுச்சூழல் அதிகாரிகளின் மேற்பார்வையின் கீழ், வணிகப் பொறியாளரின் ஒப்புதலுக்கினங்க, ஒரு பெக்கோ இயந்திரத்தை வழங்கி பாதை வெட்டுவதைத் தொடருவதாக அவர்கள் அறிவித்தனர்.

இருப்பினும், இந்த பாதையை போக்குவரத்துக்கு ஏற்றதாக மாற்றும் வரை இளைஞர்கள் மற்றும் பிரதேசவாசிகள் அதிகாரிகளுக்குப் உந்துகோலாக நின்றனர். அதன்படி, எங்களுடைய ஒரே நோக்கமாக இருந்த கட்டுகம்பலபுர பாதையை வெட்டி புனரமைக்க பொல்பிதிகம பிரதேச சபையினால் ஒரு பெக்கோ இயந்திரம் வழங்கப்பட்டது. இதன் மூலம் பாதையை வெட்டி புனரமைத்து போக்குவரத்துக்கு ஏற்றதாக மாற்ற எங்களுக்கு வாய்ப்பு கிடைத்தது. இந்தப் பாதையை உபயோகிப்பதற்கு ஏற்றாற் போல் பழுது பார்த்து புனரமைத்தமையினால், சுமார் 7 கிராமங்களில் உள்ள ஏராளமான மக்களுக்கு தினசரி போக்குவரத்தை மேற்கொள்ள இயலுமான சந்தர்ப்பம் கிடைத்துள்ளது. பாதையை புனரமைக்கும் இந்தச் செயற்பாட்டை நல்ல முறையில் முடித்துக்கொள்வதற்காக எங்களுடைய இளைஞர் குழாமிற்கு பின்னூட்டமாக இருந்து ஊக்கமளித்த மாஎலிய விகாரையின் தலைமை சுவாமி அவர்களுக்கும், குருணாகல் சமூக ஒத்துழைப்பு மன்றத்தின் அதிகாரிகளுக்கும் இளைஞர் மன்றம் சார்பாக எங்கள் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அத்தோடு, எங்களுடைய அழுத்தச் செயற்பாட்டு நடவடிக்கைகள் மூலம் இந்தப் பாதையை மக்களுக்கு உபயோகிக்கத் தகுந்தவாறு புனரமைத்து கையளிப்பதற்காக பங்களித்த அரச நிறுவனங்களான பொல்பிதிகம பிரதேச சபை மற்றும் வணிக கண்காணிப்பு காரியாலயம் போன்ற நிறுவனங்களுக்கும் இத்தால் எங்களுடைய நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம். எங்களுடைய அடுத்த நோக்கம் என்னவென்றால், சிவில் சமூக அமைப்புக்கள், பிரதேசவாசிகளுடனும் மற்றும் பிரதேச சபை, பிரதேச செயலகம் போன்ற அரச நிறுவனங்களுடன் இணைந்து இந்தப் பாதையை தாரிட்டு மக்கள் பயன்பாட்டிற்கு உகந்தவாறு மேம்படுத்தி மாற்றியமைப்பதே பொல்பிதிகம பிரதேசத்தின் இளைஞர் மன்றத்தின் எதிர்பார்ப்பாகும்.

குருநாகல் இளைஞர் அமைப்பு



# "රන් මාවත"

කුරුණෑගල දිස්ත්‍රික්කයේ පොල්පිතිගම ප්‍රාදේශීය ලේකම් කොට්ඨාසයේ මා ඵළිය ග්‍රාම සේවා වසමට අයත් බණ්ට හන්දිය සිට කටුගම්පල පුරට දිවෙන මාර්ගය අබලන් තත්වයක පැවති අතර කිසිම රාජ්‍ය ආයතනයක හෝ රාජ්‍ය නොවන ආයතනයකට ඇස නොගැටුණු ගමනාගමනයට අපහසු මාර්ගයක් වූ අතර එම මාර්ගය තුළින් ගමන් ගන්නා ජනතාවට අපහසුතා රාශියකට මුහුණ දුනි... කාලයක් ගෙවී ගියද ප්‍රදේශවාසින්ගේ වැඩි ඉල්ලීම් තුළ උවද වගකිව යුතු බලධාරින්ගේ අවධානය යොමු වුයේ නැත... එවන් අවස්ථාවක් තුළදී ප්‍රදේශයේ ක්‍රියාත්මකවන NAFSO ආයතනයට අනුබද්දිත කුරුණෑගල දිස්ත්‍රික්කයේ ක්‍රියාත්මක වන ප්‍රජා සහයෝගිතා සංසදයේ අවධානය යොමු විය. ඒ තුළ ක්‍රියාත්මක වන පොල්පිතිගම ප්‍රාදේශීය තරුණ බල මණ්ඩලයේ මැදිහත් වීම තුළ මෙම මාර්ගය පිළිසකර කිරීමට මූලිකත්වය ගන්නා ලදී... ප්‍රථමයෙන් අදාළ අංශය දැනුවත් කිරීම සඳහා අප විසින් පියවර ගැනුණි. ඒ අනුව ගම්මානයේ පූජ්‍ය පක්ෂය, ප්‍රදේශයේ ක්‍රියාත්මක රාජ්‍ය නිලධාරින්, සමිති සමාගම්වල නිලධාරීන්,ගම්වාසීන් ඒකරාශී කර ගනිමින් ඔවුන්ගේ අදහස් විමසමින් දැනුවත් කරන ලදී.

ඔවුන්ගේ එකඟතාවය අනුව උපදේශන ක්‍රියාවලිය උපයෝගී කර ගනිමින් මාර්ගය පිළිසකර කිරීම සඳහා පැවරී ඇති රාජ්‍ය ආයතන අප විසින් තෝරා ගැනුණු අතර, ඒ අනුව රාජ්‍ය ආයතන වශයෙන් පොල්පිතිගම ප්‍රාදේශීය ලේකම් කාර්යාලය, පොල්පිතිගම ප්‍රාදේශීය සභාව, එමෙන්ම මාර්ගයට සමාන්තරව ඇල මාර්ගයක් යාම නිසා එගොඩගම ව්‍යාපාරි අධිකාරි කාර්යාලය යන රාජ්‍ය ආයතන දැනුවත් කරන ලදි. ඔවුන් දැනුවත් කිරීමෙන් පසුව අපහට වැටහනී ගිය කරුණු අනුව මෙම කටයුත්ත සිදුකිරීම අපහසු කාර්යයක් තරුණ අපහට වැටහි. ඉන් අනතුරුව අපගේ තරුණ බල මණ්ඩලය ඒක රාශි වී ප්‍රජා සහයෝගිතා සංසදයේ සම්බන්ධීකාරක වන අජිත් රූපසිංහ මහත්මා සහා මූල්‍ය ලේකම් සංජීව සම්පත් යන මහත්වරුන් සමඟ අප සාකච්චා කර මෙම කටයුත්ත කෙසේ හෝ ඉටු කර ගැනීමට අප සියලු දෙනාම අදිටන් කර නැවත රජයේ ආයතන වල වගකිව යුතු නිලධාරීන් සමඟ සාකච්චා වට කිහිපයක් සිදු කළා. එයින් නොනැවතී අප උද්දේශන ක්‍රියාවලියද සිදු කළා. මෙහි ප්‍රතිඵලයක් ලෙස පොල්පිතිගම ප්‍රාදේශීය සභාවේ ලේකම්තුමිය මෙම මාර්ගය පිළිසකර කරදීමට අප හට පොරොන්දු විය. ඒ අනුව තාක්ෂණ නිලධාරීන් හා පරිසර නිලධාරීන්ගේ අධීක්ෂණයෙන් අනතුරුව ව්‍යාපාර ඉංජිනේරු තුමාගේ අනුමැතිය ඇතිව ඔවුන් විසින් බැකෝ යන්ත්‍රයක් ලබා දී පාර කැපීමට කටයුතු කරන බවට ප්‍රකාශ කර සිටිහ.

නමුත්, අප මෙම මාර්ගය පිළිසකර ගමනාගමනය සඳහා සුදුසු පරිදි සකසන තුරු අප ඔවුන්ගේ පසු පසින් සිටිමින් තරුණ තරුණියන්, ප්‍රදේශවාසීන් සිටිහ. ඒ අනුව පොල්පිතිගම ප්‍රාදේශීය සභාව විසින් අපගේ අරමුණ වූ කටුගම්පලපුර මාර්ගයේ කපා පිළිසකර කිරීම සඳහා ප්‍රාදේශීය සභාව මගින් බැකෝ යන්ත්‍රයක් ලබා දුනි.. මාර්ගයේ කපා ගමනාගමනයට සුදුසු පරිදි සැකසීමට අපහට අවස්ථාව උදා විය.. මෙම මාර්ගය පිළිසකර කිරීම නිසාවෙන් ගම්මාන 7ක පමණ විශාල ජනතාවකට එදිනෙදා ගමනාගමනයට පහසුව ඇති විය. අපේ තරුණ කණ්ඩායම සඳහා මෙම ක්‍රියාවලිය නිම කර ගැනීම සඳහා අප පසු පසින් සිට අපට දිරිමත් කල මා එළිය විහාරස්ථානයේ විහාරාධිපති ස්වාමීන් වහන්සේ, කුරුණෑගල ප්‍රජා සහයෝගිතා සංසදයේ නිලධාරීන් හට තරුණ බල මණ්ඩලය වශයෙන් අපගේ ශීර්ෂ ප්‍රණාමය පුද කරන අතර, ඒ වගේම අපගේ උද්දෙශන ක්‍රියාවලිය තුළින් මෙම මාර්ගයේ පිළිසකර කිරීම සඳහා කටයුතු කළ රාජ්‍ය ආයතන වන පොල්පිතිගම ප්‍රාදේශීය සභාව වාගේම ව්‍යාපාරි අධිකාරී කාර්යාලය යන ආයතන වලට අප ස්තුතිවන්ත වෙමි. අපගේ මීලඟ අරමුණ මෙම මාර්ගය ජනතාවගේ එදිනෙදා කටයුතු පහසු කරගැනීම වෙනුවෙන් ප්‍රදේශවාසීන්, රජයේ ආයතන සමඟ එක්ව වැඩිදියුණු කර ගැනීමට පොල්පිතිගම ප්‍රාදේශීය තරුණ බලමණ්ඩලය ලෙස බලාපොරොත්තු වෙමි.....

තරුණ සංවිධානය - කුරුණෑගල



# නායකත්වයක් කරා යන තරුණ පරපුර

මා ශ්‍රී විමුකති තරුණ ව්‍යාපාරයට බැඳී ගතවන්නේ මාගේ සතරවන වසරයි යහපත් සමාඩයක් සඳහා වූ තරුණ ව්‍යොපාරය යන තේමා පාඨය යටතේ ඉදිරියට හැදෙන අපගේ තරුණ කැල පරිසරය සමාජය ආගමික සහජීවනය ආපදා කළමණාකරණය සමාජ දේශාලනය හා තවත් බොහෝ මාතෘකා ඔස්සේ අපගේ වැඩකටයුතු කරගෙන යන්නාවූ උදයෝගීමත් කණ්ඩායමකි.

මා ජීවත් වන්නේ මිගමුව නමින් හඳුන්වන සුන්දර නගරයේය. අපටම ආවේනික වූ අලංකාර කලපුවක් හිමි මිගමුව ජනතාවගේ ජීවිකාව බැඳී ඇත්තේද මිගමුව කලපුව සමගයි. මෙවනු විශේෂිත වූ ජෛව පද්ධතියක් ඇති ප්‍රදේශයක ඉපදීමට පින්වන්ත වූ අපගේ පරම යුතුකමක් ලෙස කලපුව හා කඩෝලාන පරිසරය රැකගැනීම ප්‍රමුක වගකීමක් ලෙස තකන මාගේ සහෝදර තරුණ කැළ සමග එක්ව මමද ඒ සඳහා ක්‍රියා කරන්නේ මහත් කැමැත්තෙනි.

එමෙන්ම විවිධ පරිසර පද්ධතී ගැනත් හොඳ අවබෝධයක් හා දැනුමක් ලබාගැනීම සඳහා අප

තරුණ ව්‍යාපාරය විසින් සිදු කරන වැඩසටහන් එමටයි. ඒ ලැබෙන දැනුමත් සමග අප ස්වභාවදහම් මාතාව අවලස්සන් වීම වැලැක්වීම හා හැකි පමණින් ඇයව පිරිසිදු කර ලස්සන කිරීමට අපගේ ශ්‍රමය හා කාලය යොදවන්නේ වැඩිහිටි බාල සැමගේ නොහඩු කැපවීමත් සමගයි. තවද බෝට්ටු මගින ගොස් අපගේ කළපුවේ අපිරිසිදු තැන් පිරිසිදුකර එම ස්ථානයේ හැඩ බලන්නේද කඩෝලාන පැල සිටුවා නව කඩෝලාන පද්ධතියක් ඇති කරන්නේද මහත් අඩම්භරයකිනි. එමෙන්ම අපගේ සහෝදරයන් වන සිංහල දමිළ හා මුස්ලිම් සොයුර සොයුරියන් සමග සතුටු සිතින් අත්දැකීම් බෙදා ගැනීමටද ක්‍රීඩාව මාධ්‍යක් කොට ගෙන සන්නිවේදන දුෂ්කරතාවයන් හමුවේද අප සහෝදරත්වය වැඩිදියුණු කරගැනීමටද අමතක කලේ නැත. අප කොදු නාරටිය වන ජාතික ධීවර සහයෝගීතා ව්‍යාපාරය සමග අත්වැල් බැදගෙන කටයුතු කරන අනෙකුත් තරුණ ව්‍යාපාර සමගද එකමුතුව සහජීවනයෙන් හා හොඳ අන්තර් සම්බන්ධතාවයක් පවත්වා ගනිමින් දශක කිහිපයක් පුරා එක්ව ගමන් කරන්නෙමු.

ශ්‍රී විමුක්ති තරණ ව්‍යාපාරය වැඩිහිටි අයියලා අක්කලා වශයෙන් නවයොවුන් වියේ පසුවන අපගේ සහෝදර සහෝදරියන්ට දැනුවත් කිරීමේ වැඩසටහන් අත්දැකීම් බෙදා ගැනීම් මගින් අප තරුණ ව්‍යාපාරයේ අනාගතය වන ඔවුන් ඉදිරිය සඳහා පුහුණු කරවන්නේ මෙවන් සුවිශේෂී කර්තව්‍යයන් සිදු කරන තරුණ ව්‍යාපාරයක් නොකැඩී ඉදිරි අනාගතයේදීත් පැවතීම අනිවාර්‍යවන්න නිසා යන්න මගේ මතයයි.

මෙවැනි විසල් අත්දැකීම් රාශියක් ලබාගත් මාගේ පෞරුෂත්වය සහ ආත්ම විශ්වාසය වැඩිදියුණු කරගැනීමේ මහගු තෝතැන්නක් වූයේ ශ්‍රී විමුක්ති තරුණ ව්‍යාපාරයයි. අප සහෝදර සහෝදරියන්ගේ දක්ශතා හදුනා ගැනීමටත් වර්ධනය කරගැනීමටත් මෙම තරුණ ව්‍යාපාරය ශක්තියක් වූ බව සැකයක් නොවේ.

අප වැනි අභිමානවත් හා ආත්ම තෘප්තියෙන් හෙබි තවත් තරුණ පරපුරක් ඉදිරියේදී බිහිකිරීමටත් නොකඩවා මෙම සුවිශේෂී කර්තව්‍යයන් සිදුකිරීමට ශක්තියක් ශ්‍රී විමුක්ති තරුණ ව්‍යාපාරයට පතමින් එහි වත්මන් ලේකම් ධූරය හොබවන මම මෙයින් තිත තබමි.

ශ්‍රී විමුක්ති තරුණ ව්‍යාපාරය මිගමුව.

'මිෂෙල් විශ්මිනි කණිෂ්කා




# தலைமைத்துவத்தை நோக்கிப் பயணிக்கும் இளந்தலைமுறை

நான் ஸ்ரீ விமுக்தி இளைஞர் இயக்கத்தில் இணைந்து தற்போது நான்காவது ஆண்டில் தடம் பதித்து இருக்கின்றேன். சிறந்ததோர் சமூகத்தை கட்டியெழுப்பும் இளைஞர் இயக்கம் என்ற கருப்பொருளின் கீழ் வளர்ந்து வரும் எங்கள் இளைஞர்கள், சுற்றுச்சூழல், சமூகம், மத சகவாழ்வு, பேரிடர் மேலாண்மை, சமூக நீதி மற்றும் பல தலைப்புகளில் எங்கள் பணிகளைத் தொடர்ந்து செல்கின்ற ஒரு ஆர்வமுள்ள குழுவாகும்.

நான் நீர்கொழும்பு என்ற அழகான நகரத்தில் வசிக்கிறேன். தங்களுக்கென ஒரு அழகான களப்பைக் கொண்ட நீர்கொழும்பு மக்களின் வாழ்வாதாரமும் நீர்கொழும்பு களப்புடன் பின்னிப் பிணைக்கப்பட்டுள்ளது. இவ்வளவு தனித்துவமான சுற்றுச்சூழல் அமைப்பைக் கொண்ட ஒரு பகுதியில் பிறந்ததற்கு நாம் பாக்கியவான்கள் என்பதால், களப்பினையும், சதுப்புநிலக் காடுகளையும் பாதுகாப்பது நமது முதற் கடமையாக விளங்குகின்றது. மேலும் அதை ஒரு முதன்மைப் பொறுப்பாகக் கருதும் எனது சக இளைஞர்களுடன் இணைந்து இது தொடர்பாக செயற்படுவதில் நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன்.

மேலும், பல்வேறு சுற்றுச்சூழல் அமைப்புகளைப் பற்றிய சிறந்த புரிதலையும் அறிவையும் பெற்றுக்கொள்வதற்காக எங்கள் இளைஞர் இயக்கமானது நிறைய திட்டங்களை செயற்படுத்துகின்றது.

நாம் பெற்றுக்கொள்கின்ற அறிவைக் கொண்டு, இயற்கை அன்னை அலங்கோலமாக (அசுத்தமாக) மாறுவதைத் தடுக்கவும், முடிந்தவரை அதைச் சுத்தம் செய்து அழகுபடுத்தவும் இளைஞர்கள் தொடக்கம் பெரியவர்கள் என அனைவரின் அசைக்க முடியாத அர்ப்பணிப்புடன் நமது கடின உழைப்பையும் நேரத்தையும் இதற்காக செலவிடுகின்றோம். மேலும், படகின் மூலம் எங்கள் களப்புக்குச் சென்று அசுத்தமாக இருக்கும் இடங்களை சுத்தம் செய்து களப்பினை பராமரிப்பது மற்றும் சதுப்புநில தாவரங்களை நட்டு புதிய சதுப்புநில அமைப்பை உருவாக்குவதற்காக செயற்பட்டமையும் நாங்கள் பெருமிதம் அடையக் கூடிய ஒரு விடயமாகும். எங்கள் சகோதரர்களான சிங்கள, தமிழ் மற்றும் முஸ்லிம் நண்பர்கள் நண்பிகளுடன் எங்கள் அனுபவங்களைப் பகிர்ந்து கொள்ளவும், தகவல் தொடர்பு எங்கள் முதுகெலும்பாக திகழக்கூடிய தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கத்துடன், பல தசாப்த காலமாக கைகோர்த்துப் பயணிக்கின்ற ஏனைய இளைஞர் சிரமங்கள (மொழித்தடைகள்) இருந்தபோதிலும், விளையாட்டுக்கள் மூலம் எங்கள் சகோதரத்துவத்தை மேம்படுத்தவும் நாங்கள் மறக்கவில்லை.

இயக்கங்களுடனும் ஒற்றுமையாக சகவாழ்வு மற்றும் நல்ல உறவுகளைப் பேணி செயல்பட்டு வருகிறோம்.

ஸ்ரீ விமுக்தி இளைஞர் இயக்கத்தின் மூத்த சகோதர சகோதரிகள் என்ற வகையில் இளம் பருவத்தினரான எங்கள் தம்பி தங்கைகளுக்கு விழிப்புணர்வு பயிற்சி பட்டறைகளை மூலம் நாம் பெற்றுக் கொண்ட அறிவு மற்றும் அனுபவங்களைப் பகிர்ந்து கொள்வதன் மூலம் எங்கள் எதிர்கால சந்ததிகளான அவர்களையும் பயிற்றுவிப்பது எங்களது கட்டாயக் கடமையாகும். ஏனெனில் இந்த இளைஞர் அமைப்பின் தொடர்ச்சியான செயற்பாட்டிற்கு இது முக்கியமானதாகும் என்பதே எனது கருத்தாகும்.

இவ்வாறான பரந்துபட்ட அனுபவங்களை பெற்றுக்கொண்டு எனது ஆளுமையையும் தன்னம்பிக்கையையும் மேம்படுத்த எனக்கு ஒரு சிறந்த களமாக அமைந்தது ஸ்ரீ விமுக்தி இளைஞர் இயக்கம் என்பதில் நான் பெருமிதம் அடைகின்றேன். இந்த இளைஞர் இயக்கமானது, நமது சகோதர சகோதரிகளின் திறமைகளை அடையாளம் கண்டு அவற்றை மேம்படுத்துவதற்காகவும் ஒரு பக்க பலமாக இருந்து வருகிறது என்பதில் எவ்வித ஐயமும் இல்லை.

ஸ்ரீ விமுக்தி இளைஞர் இயக்கமானது எதிர்காலத்தில் எங்களைப் போன்ற மற்றுமொரு இளந்தலைமுறையை உருவாக்கி, அதன் பணிகளை தொடர்ச்சியாக முன்னெடுத்துச் செல்லவதற்கான அனைத்து வலிமையையும் பெற வேண்டும் என்ற பிரார்த்தனையோடு தற்போதைய செயலாளரான நான் வாழ்த்திக்கொண்டு இத்தால் இந்தக் கட்டுரைக்கு முற்றுப்புள்ளி இடுகின்றேன்.

ஸ்ரீ விமுக்தி இளைஞர் இயக்கம் நீர்கொழும்பு.
"மிஷெல் விஷ்மினீ கனிஷ்கா"



# இயற்கை அழகைத் தேடி ஒரு இளைஞர் பயணம்

திருகோணமலை ஒரு சுற்றுலாத் தளம் என்பதில் எந்தவொரு ஆச்சரியமில்லை. கோணேஷ்வரம் கோயில், நிலாவேலி கடற்கரை, கிண்ணியா வெந்நீர் ஊற்றுகள் போன்றவவை அமையப் பெற்றுள்ளமையால் பலர் திருகோணமலைக்கு வருகை தர விரும்புகிறார்கள். இங்கு புறாத் தீவு என்பது பலருக்குத் தெரிந்த ஒரு அழகான இடம். மேலும் நிலாவெலி கடற்கரையிலிருந்து சுமார் ஒன்றரை கிலோமீட்டர் தொலைவில் அமைந்துள்ள இந்த புறாத் தீவு மிகவும் அழகாக காட்சியளிப்பதில் எவ்வித ஐயமும் இல்லை. இந்த இடம் இரண்டு தீவுகளைக் கொண்டுள்ளது. இவற்றில், பெரிய தீவு "புறாத் தீவு" மற்றும் மற்றொன்று "காக்காத் தீவு". நீங்கள் நிலாவெலி கடற்கரையிலிருந்து படகு மூலம் இந்தத் தீவுக்குச் செல்ல வேண்டும்.

பண்டைய புராணங்களின்படி, மன்னர் காலத்தில், இந்த தீவு புறாக்கள் மூலம் செய்திகளைப் பரிமாறிக் கொள்ளும் மையமாக இருந்தது. அதாவது செய்திகளைப் பரிமாற்றிக்கொள்வதற்காக புறாக்கள் வைக்கப்பட்டிருந்த இடம். எனவே புறா தீவு என்ற பெயர் இதன் மூலம் வந்ததாக கற்பனை செய்யலாம்.

தீவின் சிறப்பு அம்சங்களைப் பற்றிப் பேசுகையில், இது இலங்கையில் உள்ள ஒரே தீவு தேசிய பூங்காவாகும். இது 1970 இல் ஒரு சரணாலயமாக நியமிக்கப்பட்டாலும், இது 2003 இல் மட்டுமே ஒரு தேசிய பூங்காவாக நியமிக்கப்பட்டது. புறாத் தீவைச் சுற்றி கிட்டத்தட்ட 100 வகையான பவளப்பாறைகள் உள்ளன, மேலும் அலங்கார மீன்கள் 300 ஆண்டுகளுக்கும் மேலாக அங்கு வாழ்கின்றன. அரிய கடல் தாவரங்கள் மற்றும் உயிரினங்களையும் நீங்கள் இங்கே காணக்கூடியதாக உள்ளது.

மலைகளால் சூழ்ந்த இந்த புறாத் தீவு உண்மையிலேயே எழில் பொங்கும் ஒரு இடமாகும். மிகப்பெரிய கல்லு மலைகளில் ஏறி சுற்றியுள்ள பகுதியைப் பார்ப்பதற்கும் இங்கு ஏராளமான வாய்ப்புகள் கிடைக்கின்றன. தீவின் கிழக்குப் பகுதியில் காணப்படுகின்ற ஆழமற்ற, சுத்தமான கடற்படுகைகள், தீவு முழுவதும் காணப்படும் மரஞ்செடி கொடிகள் மற்றும் சிப்பிகள் ஒரு வித்தியாசமான அழகை கொண்டுவருவதோடு கடற்கரையின் அழகினை மேலும் மெருகூட்டுகின்றது. அதேபோல, இத்தீவைச் சுற்றி நடப்பதற்காக இயற்கையாக அமையப் பெற்றுள்ள சிறிய நடைபாதைகள் காணப்படுவதால் இத்தீவானது இலங்கையில் காணப்படுகின்ற ஏனைய சிறு தீவுகளை விடவும் தனித்துவத் தன்மையை தன்னகத்தே கொண்டுள்ளது.

கடலின் அடிப்பகுதியில் உள்ள அதிசயங்களைக் கண்டறிய முற்பட்ட நாங்கள், கடலுக்கு அடியில் மறைந்திருக்கும் இன்னொரு உலகின் அழகைக் கண்டு உண்மையிலேயே வியந்து போனோம், இந்த அழகைக் கண்ட பிரமிப்பில் எங்கள் கண்கள் அதனை நம்ப மறுத்த தருணம் அது.

அழகான பவளப்பாறை இனங்கள், கடலில் சுதந்திரமாக சுற்றித் திரியும் வண்ணமயமான மீன்களுக்கு மத்தியில் டைவிங்(கடலின் ஆழத்துக்குச் சென்று பாரவையிடல்) செய்த அனுபங்களினூடாக , உண்மையில் ஏன் நாங்கள் கடல் வளத்தை பாதுகாக்க வேண்டும் என்பதைப் புரிந்துகொள்ள எங்களுக்கு பின்னூட்டமாக இருந்தது.

இளைஞர்களாகிய நாம், மனித நடவடிக்கைகளின் தாக்கங்களிலிருந்து இந்த விலைமதிப்பற்ற சுற்றுச்சூழல் அமைப்பைப் பாதுகாக்க முன்வந்து செயற்பட வேண்டும். பூமியின் பல்லுயிர் பெருக்கத்திற்கு கடல் தாயகமாக உள்ளது, மேலும் இது உலகளாவிய ரீதியில் ஒரு பில்லியனுக்கும் அதிகமான மக்களுக்கு புரதத்தின் முக்கிய வகிபாகத்தை வழங்குகிறது. 2030 ஆம் ஆண்டுக்குள் கடல் சார்ந்த தொழில்களில் 40 மில்லியன் மக்கள் வேலை செய்வார்கள் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

எனவே, எதிர்காலத்திலும் நமது பொருளாதாரத்திற்கும் அதனை மேம்படுத்துவதற்கும் கடல் அத்தியாவசியமானதாக காணப்படும் என்பதை மீண்டும் தெளிவுபடுத்த தேவையில்லை. ஆனால் நாம் 90% பெரிய மீன் இனங்களையும் 50% பவளப்பாறைகளையும் அழித்து கடலை சுரண்டுகின்ற செயற்பாடுகளில் ஈடுபட்டு வருகின்றோம், அதாவது, கடலால் மீண்டும் உருவாக்க முடியாத அளவுக்கு, நாம் கடலில் இருந்து எல்லாவற்றையும் எடுத்துக்கொள்கிறோம். கடல் கொண்டிருக்கும் அனைத்து நன்மைகளையும் மீறி, தற்போது ஏற்பட்டுள்ள நிலைமை என்னவென்றால், கடலுக்கான நமது ஆதரவு அவசியமான தருணமாகும். இந்தக் கட்டுரையின் நோக்கம், நமது வாழ்வில் கடல் வகிக்கும் முக்கிய பங்கை மக்களுக்கு நினைவூட்டுவதும், கடல் பாதுகாப்பின் முக்கியத்துவத்தைப் பற்றி அவர்களுக்குக் எடுத்துரைப்பதுமாகும்.

விஹங்கி கொடிப்பிலி
திருகோணமலை




# ස්වභාවික සුන්දරත්වය සොයා ගිය තරුණ චාරිකාව

ත්‍රිකුණාමලය කියන්නේ සංචාරක පාරාදීසයක් කියලා අමුතුවෙන් කියන්න ඕන නෑ. කෝනේෂ්වරම් කෝවිල, නිලවැලි මුහුදු තීරය, කින්නියා උණුවතුර ළිං, ආදී මේ දේවල් නිසා ත්‍රිකුණාමලයේ සංචාරය කරන්න ගොඩාක් දෙනෙක් කැමතියි! මේ අතර ගොඩාක් දෙනෙක් දන්න සුන්දර තැනක් තමයි පරවි දූපත කියන්නේ. දෙමළ භාෂාවෙන් කිව්වොත් " පරාමලේ" නිලාවැලි වෙරළ තීරයේ ඉඳලා කිලෝමීටර් එකහමාරක් විතර ඈතින් තියෙන මේ පරවි දූපත අතිශයින්ම සුන්දර එකක් බව නොඅනුමාන ය. මෙම ස්ථානය දූපත් දෙකකින් සමන්විත වේ. මේ අතරින් ලොකු දූපත " පරවි දූපත " වන අතර අනිත් දූපත ''කාක්ක දූපත " වේ. නිලාවැලි වෙරල තීරයේ සිට බෝට්ටුවකින් මෙම දූපතට ගමන් කිරීමට සිදු වේ.

අතීත ජනප්‍රවාද වලට අනුව නම් රජ කාලේ මේ දූපත පරවියන් මගින් පණිවුඩ හුවමාරු කිරීමේ මධ්‍යස්ථානයක්. ඒ කියන්නේ සංදේශ යවන්න අවශ්‍ය පරවියන් ගාල් කරලා තැබූ ස්ථානයක්. ඉතින් මේ අනුව පරෙවි දූපත් හි නාමය මෙලෙස බිඳී ආවක් බව සිතන්නට හැකි.

දූපතේ විශේෂතා ගැන කතා කරොත් මේක තමයි ශ්‍රී ලංකාවේ එකම දූපත් ජාතික උද්‍යානය. 1970 දී මේක අභය භූමියක් ලෙස නම් කර තිබුනද 2003 දී තමයි ජාතික උද්‍යානයක් ලෙස නම් කරලා තියෙන්නේ. පරවි දූපත ආශ්‍රිතව කොරල් විශේෂ 100 කට ආසන්න ප්‍රමාණයක් තිබෙන අතර විසිතුරු මසුන් වර්ග 300 කට වැඩි ප්‍රමාණයක් ජීවත් වෙනවා. තව දුර්ලභ ගනයේ මුහුදු ශාඛ සහ ජීවීන් ආදීන් මෙහිදී නරඹන්න පුළුවන්.

ගල් පර වලින් ගහන මේ පරවි දූපත ඇත්තටම සුන්දර තැනක්. සුවිශාල ගල් කඳු උඩට නැගලා අවට වටපිටාව බලන්නත් මෙතනදී හොඳටම අවස්ථාව තියෙනවා. දූපතේ නැගෙනහිර පැත්තේ තියෙන නොගැඹුරු පිරිසිදු පතුළ පෙනෙන මුහුදු තීරයත් දූපත පුරාම තියෙන ගස් වැල් සහ සිප්පි කටු නිසාත් අමුතුම ලස්සනක් මෙම මුහුදු තීරයට එකතුවෙලා තියෙනවා. ඒ වගේම දූපත වටේම ඇවිදින්න තියෙන ස්වාභාවික මං පෙත් නිසා මේ දූපත ලංකාවේ පවතින අනෙකුත් කුඩා දූපත් වලට සාපේක්ෂව විශේෂත්වයක් උසුලනවා.

මුහුදු පතුලේ අසිරිය සොයා කිමිදුම් කළ අපද සැබැවින්ම මවිතයට පත්වූයේ මුහුද යට සැඟවුණු ලෝකයේ සුන්දරත්වයෙන්) දැස් අදහාගත නොහැකිවය. නොහැකිවය. සුන්දරත්වයෙන් අනූන කොරල් විශේෂ, මුහුද තුළ නිදහසේ සැරිසරන වෛවර්ණ මසුන් අතරින් කිමිදුම් කිරීමෙන් ලද අත්දැකීම තුළින් සැබැවින්ම අප සාගරය රැකිය යුත්තේ මන්දැයි පිළිබඳව අපට හොඳින් වටහා ගැනීමට හැකි විය.

මානව ක්‍රියාකාරකම්වල බලපෑම් තුළින් මෙම වටිනා පරිසර පද්ධතිය ආරක්ෂා කර ගැනීමට තරුණයින් ලෙස අප හෝ බලගැන්විය යුතුය. සාගරය පෘථිවියේ ජෛව විවිධත්වයේ නිවහන බඳු වන අතරම, එය ලොව පුරා බිලියන ගණනකට වැඩි පිරිසකට ප්‍රධාන ප්‍රෝටීන් ප්‍රභවයන් සපයයි. 2030 වන විට සාගරය පාදක කරගත් කර්මාන්තවල නියැලී සිටින ජනතාව මිලියන 40 ක් බවට ඇස්තමේන්තු කර ඇත.

එබැවින් අනාගතේ ද සාගරය අපේ ආර්ථිකයට අත්‍යවශ්‍ය බව අමුතුවෙන් කිව යුතු නැත. නමුත් විශාල මත්ස්‍ය ගහනයෙන් 90%ක් සහ කොරල්පර වලින් 50% ක් විනාශ කරමින් අපි සාගරය සූරාකමින් සිටිමු. සාගරයට නැවත සංශ්ලේෂණය කල නොහැකි පරිමාණයෙන් අප සාගරයෙන් සියලුම දෑ ලබා ගනිමින් සිටින්නෙමු. සාගරය සතුව සියලු ප්‍රතිලාභ තිබුණ ද වර්තමාන තත්ත්වය නම්, මේ ගෙවෙන්නේ සාගරයට අපගේ සහාය අත්‍යවශ්‍යම මොහොතයි.

මෙම ලිපියෙහි අරමුණ වූයේ සාගරය අපගේ ජීවිත තුළ ඉටු කරන වැදගත් කාර්ය භාරය පිළිබඳව මිනිසුන්ට මතක් කර දීමත් සමුද්‍ර සංරක්ෂණයේ වැදගත්කම ඔවුනට පහදා දීමත් වේ.

විහඟි කොඩිප්පිලි- ත්‍රිකුණාමලය දිස්ත්‍රික්කය



# நாளைய எதிர்காலம் இளைஞர்கள் கையில்

**"வவுனியாவிலிருந்து நிகழும் மாற்றம் – இலங்கையின் இளைய தலைமுறைக்கு முன்மாதிரியாக மாறட்டும்."**

இலங்கையின் வடமாகாணத்தில் அமைந்துள்ள வவுனியா மாவட்டம், நீண்ட கால யுத்த அனுபவங்களையும், அதனைத் தொடர்ந்து சமூக, பொருளாதார மீள்நிர்மாணத்தையும் தாண்டி, இன்று நவீன வளர்ச்சி பாதையில் பயணிக்கத் துடிக்கும் ஒரு மாவட்டமாக விளங்குகிறது. இந்த மாறுதலுக்கு பின் நிற்கும் மிக முக்கியமான சக்தி இளைஞர்கள். இந்த இளைய தலைமுறையின் சக்தியை ஊக்குவித்து, சமூக மாற்றத்திற்கு ஊன்றுகோலாக மாற வைக்கும் ஒரு முக்கிய அமைப்பாக யுரேனஸ் இளைஞர் அமைப்பு திகழ்கிறது.

இது வவுனியா மாவட்டத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் இளம் சமூக சேவையாளர்களால் இயங்கும் இயக்கமாகும். இங்கு வளர்ந்து வரும் இளைஞர்களுக்கு உரிய வாய்ப்புகளை வழங்கி, அவர்கள் மூலம் சமூக முன்னேற்றத்தை நோக்கி பயணிக்கச் செய்யும் நோக்குடன் இயங்குகிறது.

வவுனியா மாவட்டம், யுத்தத்தால் பாதிக்கப்பட்ட சமூக அமைப்புகளைக் கொண்டுள்ளது. இத்தகைய சூழலில், இளைஞர்கள் மீண்டும் கல்வி, தொழில், சமூக ஒத்துழைப்பு போன்றவற்றில் ஈடுபட வேண்டிய தேவை மிக அவசியமானது. யுரேனஸ் அமைப்பு, இந்த பின்னணியைக் கருத்தில் கொண்டு, இளைஞர்களுக்கு, மீள்நம்பிக்கை உருவாக்கல், சமூக மேடையில் தங்களை நிறுவுவதற்கான பயிற்சி, குழு ஒருங்கிணைப்பு, பசுமை வளர்ச்சி நோக்கங்கள், இனைவுப் பண்பாட்டை வலியுறுத்துதல் இவற்றை அடிப்படையாகக் கொண்டு பயிற்சிகளை வழங்கி வருகிறது

யுரேனஸ் இளைஞர் அமைப்பின் பயணமே, வவுனியா மாவட்டத்தின் சமூக, பொருளாதார வளர்ச்சிக்கு உதவியாக விளங்குகிறது. இது தனிப்பட்ட இளைஞர்களின் திறன்களை வெளிப்படுத்தி, சமூக சேவையை ஊக்குவிக்கும் ஒருங்கிணைந்த அமைப்பாக விரிவடைகின்றது. இளம் தலைமுறையின் சக்தியை மதிப்பிடும் விதமாக, அவர்களுக்கு கல்வி, தொழில், சமூக பங்குபற்றல் ஆகிய துறைகளில் முக்கிய வாய்ப்புகளை வழங்குகிறது.

அமைப்பு வலுவான சமூக ஒற்றுமையை நிலையான முறையில் கட்டியெழுப்புவதில் முக்கிய முன்னணியாய் செயல்படுகிறது. இதன் வழிமுறைகள், சமூக திறன்கள், குழு வேலை, நம்பிக்கை மீட்டெடுக்கும் பயிற்சிகள் மற்றும் பசுமை வளர்ச்சி நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு இப்பணிகளுக்கு வழிவகுக்கின்றன. இவை, சமூகத்தின் பல்வேறு பிரிவுகளிலே புதிய ஒத்துழைப்பு வாய்ப்புகளை உருவாக்கி, சமூக அமைதிக்கு புத்துயிர் கொடுக்கின்றன.

மேலும், தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கம், யுரேனஸ் இளைஞர் அமைப்பின் தொடர்ச்சியான வளர்ச்சிக்கும், நீண்டகால நம்பிக்கையை உருவாக்கவும் முக்கிய பங்கு வகிக்கின்றது. இந்நிறுவனம், சட்டப்படியான உத்தரவாதங்களையும், ஆதரவையும் வழங்கி, இளைஞர்களின் முழுமையான பங்களிப்பை ஊக்குவிக்கின்றது. இதன் மூலம், இளைஞர்கள் தங்களின் நம்பிக்கையை மீட்டெடுத்து, சமூகத்தில் பொருத்தமான பங்களிப்பை செய்ய துடிப்பதுடன், சமூகத்தில் முன்மாதிரியாக திகழ்கின்றனர்.

இந்த இணைந்து பணியாற்றும் வித்தியாசமான முயற்சி, சமூக நெருக்கடிகளை சமப்படுத்தவும் , அமைதி, நீடித்த வளர்ச்சி மற்றும் பாதுகாப்பு அடையாளமாக விளங்கும் ஒருங்கிணைந்த சமூகத்தைக் கட்டியெழுப்புவதற்கான மூலதனம் ஆகும். இவ்வாறு, யுரேனஸ் இளைஞர் அமைப்பும், தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கமும், வேறுபாடுகளை தாண்டி, சமூகத்தின் சாதனைகளை வெளிப்படுத்தும் அமைப்புகளாக வளர்கின்றன. இவை, நீண்டஆண்டு பொறுமையுடன், சமூக நலனை முன்னெடுத்து, எதிர்காலத்திற்கான நம்பிக்கை ஏற்றுக் கொள்கின்றன.

இது வெறும் ஒரு இளைஞர் அமைப்பாக இல்லாமல், வவுனியா மாவட்டத்தின் எதிர்காலத்தை மாற்றும் இயக்கமாக வளர்கிறது.

க.சிம்சுபன்
யுரேனஸ் இளைஞர் அமைப்பு
வவுனியா மாவட்டம்.



# හෙට දවසේ අනාගත තරුණයන් අප වේ

'වව්නියාවෙන් ඇති වන වෙනස - ශ්‍රී ලංකාවේ තරුණ පරම්පරාවට ආදර්ශයක් වේවා.'

ශ්‍රී ලංකාවේ උතුරු පළාතේ පිහිටා ඇති වවුනියාව දිස්ත්‍රික්කය, යුද්ධයේ දිගුකාලීන අත්දැකීම් සහ ඉන් පසුව ඇති වූ සමාජ හා ආර්ථික ප්‍රතිසංස්කරණ ජය ගනිමින්, නවීන සංවර්ධන මාවතක ඉදිරියට යාමට උත්සාහ කරන දිස්ත්‍රික්කයකි. මෙම වෙනස පිටුපස සිටින වැදගත්ම බලවේගය තරුණ පරපුරයි. යුරේනස් තරුණ සංවිධානය යනු මෙම තරුණ පරම්පරාවේ බලය ප්‍රවර්ධනය කරන සහ සමාජ වෙනසක් සඳහා රුකුලක් බවට පත් කරන ප්‍රධාන සංවිධානයකි.

මෙය වවුනියාව දිස්ත්‍රික්කය නියෝජනය කරන තරුණ සමාජ සේවකයින් විසින් මෙහෙයවනු ලබන ව්‍යාපාරයකි. දිස්ත්‍රික්කයේ හැදී වැඩෙන තරුණ තරුණියන්ට සුදුසු අවස්ථා ලබා දීම සහ ඔවුන්ට සමාජ ප්‍රගතිය කරා ගමන් කිරීමට උපකාර කිරීමේ අරමුණින් එය ක්‍රියාත්මක වේ.

වවුනියාව දිස්ත්‍රික්කය යුද්ධයෙන් විනාශ වූ සමාජ ව්‍යුහයන්ගෙන් සමන්විත වේ. එවැනි සන්දර්භයක් තුළ, අධ්‍යාපනය, රැකියා සහ සමාජ සහයෝගීතාවයේ නැවත සම්බන්ධ වීමේ අවශ්‍යතාවය තරුණයන්ට තදින්ම පවතී. මෙම පසුබිම සැලකිල්ලට ගනිමින්, යුරේනස් සංවිධානය තරුණ තරුණියන්ට විශ්වාසය ගොඩනැගීම, සමාජ වේදිකාවේ ස්ථාපිත වීමට පුහුණුව, කණ්ඩායම් ගොඩනැගීම, හරිත සංවර්ධන ඉලක්ක සහ සහභාගීත්ව සංස්කෘතියක් අවධාරණය කිරීම මත පදනම් වූ පුහුණුවක් ලබා දෙයි.

යුරේනස් තරුණ සංවිධානයේ කියාත්මකවීම වවුනියාව දිස්ත්‍රික්කයේ සමාජීය හා ආර්ථික සංවර්ධනයට උපකාරී වේ. එය තනි තනි තරුණයින්ගේ කුසලතා ප්‍රදර්ශනය කරන සහ ප්‍රජා සේවය ප්‍රවර්ධනය කරන ඒකාබද්ධ සංවිධානයක් දක්වා ව්‍යාප්ත වෙමින් පවතී. තරුණ පරම්පරාවේ බලය අගය කරමින්, එය ඔවුන්ට අධ්‍යාපනය, රැකියා සහ සමාජ සහභාගීත්වය යන ක්ෂේත්‍රවල ප්‍රධාන අවස්ථා සපයයි.

තිරසාර අයුරින් ශක්තිමත් සමාජ සහජීවනයක් ගොඩනැගීමේදී යුරේනස් ව්‍යාපාරය ප්‍රධාන කාර්යභාරයක් ඉටු කරයි. එහි ක්‍රමවේදයන් සමාජ කුසලතා, කණ්ඩායම් වැඩ, විශ්වාසය ගොඩනැගීමේ අභ්‍යාස සහ හරිත සංවර්ධන අරමුණු මත පදනම් ව ක්‍රියාත්මක වෙයි. මේවා සමාජයේ විවිධ කොටස් අතර සහයෝගීතාවය සඳහා නව අවස්ථා නිර්මාණය කරන අතර සමාජ සාමය පුනර්ජීවනය කරයි.

තවද, යුරේනස් තරුණ සංවිධානයේ අඛණ්ඩ සංවර්ධනය සහ දිගුකාලීන විශ්වාසය ගොඩනැගීම සඳහා ජාතික ධීවර සහයෝගිතා ව්‍යාපාරය ප්‍රධාන කාර්යභාරයක් ඉටු කරයි. මෙම සංවිධානයට විධිමත් සහය ලබා දීමෙන් තරුණයින්ගේ පූර්ණ සහභාගීත්වය ප්‍රවර්ධනය කරයි. මේ හරහා, තරුණ තරුණියන් තම විශ්වාසය නැවත ලබා ගනී, සමාජයට වැඩදායී දායකත්වයක් ලබා දීමට උත්සාහ කරන අතර සමාජයේ ආදර්ශමත් චරිත බවට පත්වෙමින් ඇත.

මෙම අද්විතීය සහයෝගී උත්සාහය සමාජ අර්බුධ ආමන්ත්‍රණය කිරීමට සහ සාමය, තිරසාර සංවර්ධනය සහ ආරක්ෂාව සංකේතවත් කරන ඒකාබද්ධ සමාජයක් ගොඩනැගීමට ඇති ප්‍රාග්ධනයයි. මේ අනුව, යුරේනස් තරුණ සංවිධානය සහ ජාතික ධීවර සහයෝගිතා ව්‍යාපාරය, වෙනස්කම් ඉක්මවා ගොස් සමාජයේ ජයග්‍රහණ ප්‍රදර්ශනය කරන සංවිධාන බවට වර්ධනය වෙමින් පවතී. මේවා, වසර ගණනාවක් පුරා උත්සාහයෙන් යුතුව, සමාජ සුභසාධනය ඉදිරියට ගෙන යන අතර අනාගතය පිළිබඳ සුභදායී බලාපොරොත්තු ඇති කරයි. මෙය හුදෙක් තරුණ සංවිධානයක් පමණක් නොව, වවුනියාව දිස්ත්‍රික්කයේ අනාගතය වෙනස් කරන ව්‍යාපාරයක් දක්වා වර්ධනය වෙමින් පවතී.

සිම්සුබන්- වවුනියාව දිස්ත්‍රික්කය



# கிரிமடிதமன ஏரிக்கான இளைஞர்களின் பங்களிப்பு

**கிரிமடிதமன ஏரி (ஜப்பான் ஜபர) தாவரங்களை அகற்றுவதன் மூலம் புத்துயிர் பெறுகிறது - சமூக பங்கேற்பு திட்டமும் நடந்தேறுகிறது....**

கிரிமடிதமன ஏரியைச் சுற்றி நீர் அமைப்பு மற்றும் பல்லுயிர் பெருக்கத்தை பாதுகாக்கும்நோக்கத்துடன், தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கம் (NAFSO), HI நிறுவனம் மற்றும் மிரிதிய அமைப்புடன் ஒன்றிணைந்து சமூக பங்கேற்புடன் ஒரு புதிய கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்த ஆயத்தமாக உள்ளதோடு, ஏரியிலிருந்து ஜப்பான் ஜபர தாவரங்களை அகற்றுதல், உள்ளூர் மீன்களை இனப்பெருக்கம் செய்து அவற்றை மீண்டும் ஏரியில் விடுதல் மற்றும் ஜப்பான் ஜபர தாவரங்களினூடாக கொம்போஸ்ட் பசளை தயாரித்து வீட்டுத்தோட்டங்களை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகள் தற்போது வெற்றிகரமாக திட்டமிடப்பட்டு வருகின்றன.

இந்த வெளிநாட்டு நீர்வாழ் தாவரத்தின் ஆக்கிரமிப்பு ஏரியின் இயற்கை நீர் அமைப்பு முறையையும் உள்ளூர் பல்லுயிரினங்களின் பெருக்கத்தையும் மற்றும் கிராம மக்களின் அன்றாட வாழ்க்கையையும் பாதித்துள்ளது. அதாவது,

- ஜப்பான் ஜபர நீர்வாழ் ஆக்கிரமிப்பினால் ஏரியில் உள்ள நீர் மாசடைந்த நிலை காணப்படுவதோடு கிராம மக்கள் குளித்தல் மற்றும் அவர்களின் பிற அன்றாட நடவடிக்கைகள் பாத்திக்கப்பட்டுள்ளன.
- மீனவர்கள் தங்கள் வாழ்வாதாரத்தை தொடருவதில் எதிர்கொள்ளும் சிரமங்கள் மற்றும் மீனினங்கள் அழிந்து செல்லும் நிலையும் ஏற்பட்டுள்ளது.
- ஏரியானது நிரம்பி வழியும் போது, ஏரியிலுள்ள ஜப்பான் ஜபர தாவரமானது விவசாயிகளின் பயிர்நிலங்களுக்குச் செல்வதால் பயிர் நிலங்கள் ஜப்பான் ஜபர தாவரத்தினால் மூடப்பட்டு அவர்களின் பயிர்கள் சேதமடைகின்றன.

இவாறு பரவலடைந்துள்ள ஜப்பான் ஜபர செடிகளை அகற்றிய பிறகு, உள்நாட்டு மீன்களை இனப்பெருக்கம் செய்து மீண்டும் ஏரியில் விடுவதன் மூலம் கிராம மக்களின் அன்றாட வாழ்வாதாரத்தை மேம்படுத்தி,உணவுப் பற்றாக்குறை இல்லாத சமூகத்தை உருவாக்கலாம்.

**சுற்றுச் சூழல் பாதுகாப்பு மற்றும் பொருளாதார நிலைமை ஒரே மட்டத்தில்...**

சுற்றுச் சூழல் பாதுகாப்பு, உணவுப் பாதுகாப்பு மற்றும் வீட்டுத்தோட்ட பொருளாதாரம் ஆகியவை ஆழமாக ஒன்றுடன் ஒன்று பின்னிப் பிணைந்திருப்பதை இந்த கருத்திட்டம் எமக்கு எடுத்துக்காட்டுகின்றது. உள்ளூர் மக்களின் பங்கேற்பு மற்றும் விழிப்புணர்வு செயற்பாடுகள் மூலம் இந்த திட்டத்தை நிலைபேறான முறையில் நடைமுறைப்படுத்துவதோடு, எதிர்காலத்தில் இதனூடாக நாடு முழுவதும் இவ்வாறான செயற்திட்டங்களை ஆரம்பித்து வைப்பதற்கான ஒரு வழியை திறந்து வைப்பதே எங்களுடைய நோக்கமாகும்.

இந்த திட்டத்தின் மற்றுமொரு சிறப்புமிக்க விடயம் என்னவென்றால், இந்தோனேசியாவில் நடைபெற்ற வேளாண் சூழலியல் (Agroecology ) மாநாட்டில், மிரிதிய அமைப்பை சேர்ந்த திரு.மனோஜ் சில்வா அவர்கள் பங்கேற்றமையாகும். இந்த மாநாட்டில் 22 நாடுகளை பிரதிநிதித்துவப்படுத்தும் பல்வேறு மக்கள் பங்கேற்றனர். மேலும் இந்த வேளாண் சூழலியல் மாநாட்டினூடாக திரு. மனோஜ் பெற்றுக்கொண்ட அனுபவங்கள், திறன்கள், அறிவு மற்றும் நவீன தொழிநுட்ப முறைகள் இத்திட்டத்தை மேம்படுத்துவதற்கும், வீட்டுத்தோட்ட செய்கையை மிகவும் துல்லியமான , பயனுள்ள மற்றும் நிலையான முறையில் நடைமுறைப்படுத்துவதற்கும் எமக்கு பாரிய உதவியாக இருக்கும்.

**-நன்னீர் மீனவர்களின் நிலையான விவசாயம்-**

இந்த திட்டத்தின் மூன்றாம் கட்டமாக கிரிமடிதமன ஏரியில் பரவி வரும் ஜப்பான் ஜபர நீர்வாழ் தாவரங்களை அகற்றியதன் பிற்பாடு அவற்றை கரிம உரமாக (compost )மீண்டும் பயன்பாட்டிற்கு எடுக்க ஆரம்பித்துள்ளனர்.தாவரக்கழிவுகளை சுற்றுச் சூழலுக்கு உகந்த முறையில் பயனுள்ள வளமாக மாற்றுவதன் மூலம் நீர்ச் சூழலை பாதுகாக்கவும்,பயிர்நிலங்களுக்கு சத்தான உரங்களை வழங்குவதுமே இந்த செயற்பாட்டின் முக்கிய நோக்கமாகும்.

நீர்வாழ் வளங்களை மட்டுமே நம்பியிருந்த நன்னீர் மீனவர்களின் வருமானத்தை பன்முகப்படுத்துவதற்காகவே இந்த வீட்டுத்தோட்ட பயிர்ச்செய்கை முறை அறிமுகப்படுத்தப்பட்டது. இதன் தொடக்க கட்டமாக மிரிதிய அமைப்பின் மூலம் வழங்கப்பட்ட விதைகள், கரிம உரம் (ஜப்பான் ஜபர தாவரத்தினால் தயாரிக்கப்பட்ட கொம்போஸ்ட் பசளை), முறையான பயிர்ச்செய்கைக்குரிய அறிவுறுத்தல்கள் மற்றும் தொடர்ச்சியான வழிகாட்டுதலின் மூலம் மீனவர்களுக்கு தன்னிறைவு பெற்ற வீட்டுத் தோட்ட பயிர்ச்செய்கையை நிறுவ முடிந்தது. இந்த திட்டத்தின் மூலம் அவர்கள் உணவுப் பாதுகாப்பை பெற்றிருப்பது மட்டுமன்றி, கூடுதல் வருமானம் ஈட்டி செலவுகளைக் குறைத்து நிலையான வாழ்க்கை முறையை கட்டியெழுப்புவதற்கும் அவர்களுக்கு வாய்ப்பு கிடைத்துள்ளது.

சமூக பங்கேற்பு அணுகுமுறையின் கீழ் மிரிதிய அமைப்பானது தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கத்துடன் (NAFSO ) இணைந்து சமூகத்துடன் சரிசமனாக செயற்பட்டு, அவர்களின் தேவைகள், அறிவு மற்றும் அனுபவங்களை கருத்திற்கொண்டு நிலைபேறான தீர்வுகளை உருவாக்குவதில் முக்கிய பங்கு வகிக்கின்றது. இதனடிப்படையில், வாழ்வாதார மேம்பாடுகள்,சுற்றுச் சூழல் பாதுகாப்பு மற்றும் உணவுப் பாதுகாப்பு ஆகிய துறைகளில் சமூக உறுப்பினர்களின் நேரடி பங்கேற்புடன் புதிய அணுகுமுறைகள் மற்றும் அதற்கான நடவடிக்கைகள் வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தப் படுகின்றது.

குறிப்பாக, விவசாய நடவடிக்கைகளில் சமூகத்தை ஈடுபடுத்துவதில் , எங்கள் அமைப்பு அவர்களுக்கு புதிய விவசாய தொழில்நுட்பங்கள், இயற்கை விவசாய முறைகள், நீர் பாதுகாப்பு நடவடிக்கைகள் மற்றும் இயற்கை உரங்களின் பயன்பாடு குறித்து பயிற்சியளிக்கிறது. இச் செயற்பாடுகள் நீர்வாழ் வளங்களை மட்டுமே நம்பியிருக்கும் குடும்பங்களை விவசாயம் வரைக்கும் பன்முகப்படுத்தி அவர்களின் வருமான அளவை அதிகரிக்கவும் உதவுகின்றது. மேலும், இந்த செயன்முறை சுற்றுச்சூழலுக்கு உகந்த செயன்முறைகள் என்பதனால் இவ்வாறான பயிர்ச்செய்கைகள் சுற்றுச்சூழல் பாதுகாப்பிற்கு நீடித்த பங்களிப்பையும் வழங்குகின்றது.

கயான் ஹர்ஷமால்
பொலன்னறுவை



# "තරුණ සවිය කිරිමැටිදමනට"

**ජපන් ජබර ඉවත් කරමින් කිරිමැටි දමන වැව නව ජීවිතයකට - ප්‍රජා සහභාගීත්ව ව්‍යාපෘතියක් ක්‍රියාත්මක වෙයි...**

කිරි මැටි දමන වැව අවට ජල පද්ධතිය සහ ජෛව විවිධත්වය ආරක්ෂා කිරීමේ අරමුණින්, NAFSO ආයතනය, HI , ආයතනය සහ මිරිදිය සංවිධානය එක්ව ප්‍රජා සහභාගීත්ව ප්‍රවේශයෙන් මෙහෙය වන නව ව්‍යාපෘතියක් ක්‍රියාත්මක සූදානම්ව පවතින අතර, ජපන් ජබර ශාක වැවෙන් ඉවත් කිරීම, දේශීය මත්ස්‍ය පැටව් බෝ කර නැවත වැවට මුදා හැරීම හා ජපන් ජබර වලින් කොම්පෝස්ට් පොහොර සාදා ගෙවතු සංවර්ධනය යන පියවරයන් මේ වන විට සාර්ථකව සැලසුම් කෙරෙමින් පවතී.

මෙම මෙම ආක්‍රමණශීලී විදේශීය ජලජ ශාකය හේතුවෙන් වැවෙහි ස්වභාවික ජල පද්ධතියට හා දේශීය ජෛව විවිධත්වයට මෙන්ම, ගම් වැසියන්ගේ දෛනික ජීවිතයට ද බලපෑමක් සිදු වී ඇත.

- ජපන් ජබර හේතුවෙන් වැවේ ජලය අපවිත්‍ර වීම නිසා ගම් වැසියන්ට දිය නෑමේදී හා අනෙකුත් දෛනික ජීවිතයට සිදුවන බල පෑම්.
- ධීවරයන්ට තම ජීවන වෘත්තියේ නියලීමට ඇති අපහසුතා හා මත්ස්‍යයින් විනාශ වීම.
- වැව් පිටාර ගැලීමේදී වැවෙහි සිරවී තිබෙන ජබර ගොවීන්ගේ වගාබිම වසාගෙන ඔවුන්ගේ වගාවන්ට හානි වීම.

විශාල ලෙස ව්‍යාප්ත වී ඇති මෙම ජපන් ජබර ශාක ඉවත් කිරීමෙන් අනතුරුව, දේශීය මත්ස්‍ය පැටව් බෝ කර නැවත වැවට මුදා හැරීම මගින් ගම් වැසියන්ගේ දෛනික ජීවිතය යහපත් වන අතර ආහාර හිඟතාවයකින් තොර සමාජයක් නිර්මාණය වේ.

**" පාරිසරික ආරක්ෂාව හා ආර්ථිකය එකම මට්ටමක "**

මෙම ව්‍යාපෘතිය පෙන්වා දෙන්නේ පාරිසරික සංරක්ෂණය, ආහාර ආරක්ෂාව සහ ගෙවතු ආර්ථිකය එකට ගැඹුරු සම්බන්ධයකින් බැඳී ඇති බවයි. දේශීය ජනතාවගේ සහභාගිත්වය හා දැනුවත් කිරීම මගින් මෙම ව්‍යාපෘතිය තිරසාරව ක්‍රියාත්මක කරමින්, ඉදිරියෙදීත් මේ ආකාරයේ ආයෝජන වැඩසටහන් දිවයින පුරා ආරම්භ වීමේ මාර්ගය විවෘත කිරීම අපගේ අරමුණයි.

මෙම ව්‍යාපෘතියේ තවත් විශේෂ අවස්ථාවක් වන්නේ, මිරිදිය සංවිධානයේ මනෝජ් සිල්වා මහතා පසුගිය මාසයේදී ඉන්දුනීසියාවේ පැවති " කෘෂි පරිසර විද්‍යාව (Agroecology)" පිළිබඳ සමුළුවකට සහභාගී වීමයි. එහිදී රටවල් 22 ක් නියෝජනය කරමින් විවිධ පිරිස් සම්බන්ධ වූ අතර, මනෝජ් මහතා එම වැඩසටහනින් ලබාගත් අත් දැකීම්, දක්ෂතාවන්, දැනුම හා නවීන තාක්ෂණික ක්‍රම මෙම ව්‍යාපෘතිය දියුණු කිරීමටත් ගෙවතු වගාවන් වඩාත් නිවැරදිව, ප්‍රයෝජනවත්ව සහ තිරසාර ආකාරයකින් දියුණු කිරීමට විශාල අත්වැලක් වනු ඇත.

**"මිරිදිය ධීවරයාගේ තිරසාර කෘෂිකර්මාන්තය"**

මෙම ව්‍යාපෘතියේ තුන්වන අදියර ලෙස, කිරි මැටි දමන වැවේ පැතිරී යන ජපන් ජබර ශාක ඉවත් කිරීමෙන් පසු ඒවා කාබනික පොහොරයක් (කොම්පෝස්ට්) ලෙස යළි භාවිතයට ගැනීම ආරම්භ කර ඇත. පරිසර හිතකාමී මගින් මෙම ආකාරයෙන් ශාක අපද්‍රව්‍ය ප්‍රයෝජනවත් සම්පතක් බවට පරිවර්තනය කරමින්, ජලජ පරිසරය ආරක්ෂා කිරීමත්, ගොවිපළවලට පෝෂණවත් පොහොරක් සැපයීමත් මෙහි ප්‍රධාන අරමුණු වේ.
 ජලජ සම්පත් මත පමණක් රැඳී සිටි මිරිදිය ධීවරයන්ගේ ආදායම් මූලාශ්‍ර විවිධාංගීකරණය කිරීම සඳහා ගෙවතු වගාවන් හඳුන්වා දීම සිදු කරන ලදී. මිරිදිය සංවිදානය විසින් මූලාරම්භය වශයෙන් සපයන ලද බීජ, කාබනික පොහොර (ජපන් ජබරයෙන් සාදන ලද කොම්පෝස්ට්), වගා කාර්මික උපදෙස් සහ අඛණ්ඩ මහපෙන්වීම ඔස්සේ ධීවරයන්ට ස්වයංපෝෂිත ගෙවතු වගාවන් පිහිටුවා ගැනීමට හැකි විය. මේ හරහා ඔවුන්ට ආහාර සුරක්ෂිතතාවය පමණක් නොව, අමතර ආදායමක්ද උපයා ගැනීමට අවස්ථාව ලැබී ඇති අතර, වියදම් අඩු කර ගනිමින් තිරසාර ජීවිතයක් ගොඩනගා ගැනීමට අවස්ථාව නිර්මාණය වී ප්‍රජා සහභාගීත්ව ප්‍රවේශය යටතේ, මිරිදිය සංවිධානය හීඩ ආයතනය සමග සහයෝගයෙන් ප්‍රජාව සමග සමම්භාගිව වැඩ කරන අතර, ඔවුන්ගේ අවශ්‍යතා, දැනුම සහ පළපුරුද්ද සලකා බලා තිරසාර විසඳුම් නිර්මාණය කරයි. මෙය කෙරෙහි පදනම්ව, ජීවිකා සංවර්ධනය, පරිසරය රැකීම සහ ආහාර ආරක්ෂාව යන ක්ෂේත්‍ර තුළ ප්‍රජා සාමාජිකයන්ගේ සෘජු සහභාගීත්වය සමග නව ආකල්ප සහ ක්‍රියාමාර්ග සාර්ථකව ක්‍රියාත්මක කරයි.

